**மத்துகம பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்துகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மத்துகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்தின் பந்தி இலக்கம் 3.27 முதல் 3.32 பந்திக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டின நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கூட்டுப்பசளை தளத்தை தயாரிப்பதற்கு செலவிடப்பட்ட ரூபா 953,761 செலவினம் ரூபா 891,334 ஆக கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் கூட்டுப்பசளை தளத்தின் ஏனைய நிர்மாணங்கள்காக ஆண்டில் செலவிடப்பட்ட ரூபா 1,959,018 கட்டடத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | தவறை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பெலியத்தகந்த குடிநீர் செயற்றிட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,994,605 நிதியேற்பாடு ஆண்டில் செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோராக ரூபா 2,000,000 காண்பிக்கப்படடிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டிற்காக சம்பள மீளளிப்புக்காக காக ரூபா 100,111,630 கிடைத்திருந்த போதிலும் அது ரூபா 99,387,768 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டில் திசம்பர் 31 இல் உள்ளவாறு இலக்கம் 0000837518 என்ற இலங்கை வங்கி கணக்கின் மீதி ரூபா 2,461,134 ஆக இருந்த போதிலும் அது ரூபா 2,695,092 ஆக அதாவது ரூபா 233,958 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | முன்னைய ஆண்டிற்கான கடை வாடகை ரூபா 422,172 குறைத்து சிட்டையிடப்பட்ட தவறை சரி செய்யும் போது பெறுமதி திரண்ட நிதியத்தில் செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் நடப்பாண்டின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த ரூபா 402,915 ஆயுர்வேதப் பொருட்களின் பெறுமதி ஆண்டின் வருமானமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | 2019 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டு இதுவரை கணக்கீடு செய்யப்படாத ரூபா 2,808,341 பெறுமதியான பொறிகள், உபகரணங்களில் 17 விடயங்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் கிரயப் பெறுமதியில் மூலதனமாக்கப்படடிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | 2023 ஆம் ஆண்டிற்காகக் கிடைத்த ரூபா 16,508,803 ஆன மூலதன மானியம் ரூபா 139,403,397 ஆக அதாவது ரூபா 122,894,594 அதிகரித்து விரிவான வருமானக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்ளினில் காண்பிக்கப்படுகின்ற மீதிக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 7,564,944 வேறுபாடு காணப்பட்டது. | 2024 இன் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,750,676 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,666,765 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்ப ட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்ப ட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 12,701,633 | 12,116,195 | 9,314,302 | 7,395,121 | 14,949,575 | 14,746,013 | 10,469,809 | 4,276,204 |
| (ii) | வாடகை | 6,975,000 | 7,607,808 | 5,916,308 | 2,353,800 | 6,813,555 | 6,732,091 | 5,201,651 | 1,530,440 |
| (iii) | அனுமதி ப்பத்திரக் கட்டணம் | 2,588,000 | 3,175,990 | 3,055,690 | 264,218 | 430,000 | 374,550 | 370,800 | 3,750 |
| (iv) | ஏனைய வருமானம் | - | - | - | - | 2,374,000 | - | 3,786,611 | - |
| | மொத்தம் | 22,264,633 | 22,899,993 | 18,286,300 | 10,013,139 | 24,567,130 | 21,852,654 | 19,828,871 | 5,810,394 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஆதனவரியும் வரியும்** | | |
| (i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 9,580,966 ஆதன வரி நிலுவையில் ஆண்டின் போது ரூபா 4,593,227 அதாவது 48 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | 2024.04.30 ஆம் திகதி வரையில் ரூபா 1,062,015 அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வியாபார வரி நிலுவை ரூபா 474,878 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 143,918 அதாவது 30 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | மீளாய்வாண்டின் சிட்டையிடலை உள்ளடக்கி அறவிடுவதற்குள்ள மொத்தத் தொகை ரூபா 264,218 ஆகும். | - மேற்படி - |

**(ஆ) வாடகை**

| | | |
|---|---|---|
| கடை வாடகை வருடாந்தம் சிற்றையிடல் 6,479,489 இனால் ஆண்டின் போது ரூபா 1,691,500 அதாவது 26 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | தற்போது நிலுவையில் ரூபா 187,625 அறவிடப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 சனவரி முதல் சபைக்குச் சொந்தமான வளவில் வெளித்தரப்பினரால் உடன்படிக்கையின்றி நிர்மாணிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்ற 19 கடைகள் தொடர்பாக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடை வாடகை மதிப்பீடு செய்து அறிக்கை ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் 14 கடை உரிமையாளர்களிடமும் உடன்படிக்கை செய்யப்பட்டு 05 மிகுதி வாடகையாளர்களுக்கும் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தை இழந்து போனமைக்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக விசாரணைகள் மேற்கொண்டு நட்டம் அறவிடப்படல் வெண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டில் மத்துகம பிரதேச சபையின் பணிகளை கணனி மயப்படுத்துவதற்காக 07 முறைமைகளுக்காக தனியார் கமபனிக்கு ரூபா 1,565,000 செலுத்தப்பட்டிருந்தது. உரிய உடன்படிக்கையின் 06 111 நிபந்தனையின் பிரகாரம் | கணக்கீட்டு முறைமையை அமுல்படுத்துவதற்காக தற்போது தரவுகள் உள்ளடக்கப்படுவதுடன் சம்பளம் தயாரித்தல், நூலக நடவடிக்கைகள், கஞ்சியம் மற்றும் காகிதாதி புத்தக | கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் முறைமையை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | வேலை நாட்கள் 180 ஐ உள்ளடக்கி மென்பொருள் முறைமையாவும் இஸ்தாபிக்கவேண்டியிருந்த போதிலும் ஆதன வரி மற்றும் கடை வாடகை என்ற 02 முறைமைகள் தவிர ஏனைய 05 முறைமைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணனி மயப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இருப்புகளை ஏனைய முறைமையில் அமுல்படுத்தப்படும். | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் முறைமையை ஆக்கபூர்வமானதாக பயன்பாட்டுக்கு எடுக்காதிருக்கும் போது மேலும் 03 முறைமைகளை கொள்வனவு செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 1,855,000 மேற்கூறப்பட்ட நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக மத்துகம மற்றும் கம்பனிக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட திகதியின்றிய உடன்படிக்கை பத்திரத்தின் 03 ஆம் நிபந்தனைக்கு முரணாக ஒட்டுமொத்த முறைமையும் கணனி மயப்படுத்தாமல் மற்றும் முறையான பயிற்சியும் வழங்காமல் மொத்தக் கட்டணமும் செலுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | சிக்கனமற்ற கொள்வனவுகள் மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும். |
| (இ) | மென்பொருள் முறைமையை உரியவாறு அமுல்படுத்தாமல் இருக்கும் போது 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை அந்த நிறுவனத்திற்கு வருடாந்த கட்டணாக் ரூபா 608,528 செலுத்தப்பட்டிருந்து. | மென்பொருள் முறைமையை அமுல் படுத்துவதற்கு மக்கள் வங்கியுடன் இணைந்து இணைவழி முறைமையூடாக செலுதவும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்யப்பட்ட முறைமையை பொருளாதார நலன்களை கவனத்தில் கொள்ளும் வகையில் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இவ்வாறு சபைக்கு நட்டம் ஏற்படும் வகையில் மென்பொருள் கொள்வனவு செய்து விளைவற்று வைத்திருந்தமை மற்றும் உடன்படிக்கைக்கு முறனாக கொடுப்பனவுகள் செய்தமை தொடர்பாக மீளாய்யாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிதிப் பிரமாணம் 156 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகைக் கிரயத்தை செலவிட வேண்டியேற்பட்டமையின ால் இந்த சேவை இலங்கை வங்கியிலிருந்து பெற்றுக் கஙொள்வதற்கு அங்கீகாரம் போய் உள்ளுராய்சித் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | உடன்படிக்கைக்கு முரணாக செயற்பட்டமை மற்றும் சொத்துக்கள் உரியவாறு பயன்படுத்தாமைக் கு உரிய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 பெப்ரவரி மாதம் ரூபா 601,480 செலவில் ஆதனவரி ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் போது புதிய மதிப்பீடு அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கொவிற் தொற்று நோய் நிலைமையினால் ஆதனவரி அறவிடாமல் இருக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் 2024 ஆம் ஆண்டு முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கிடைக்கவேண்டிய வருமானம் இழந்தமைக்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஒக்டோபர் மாதம் சபைக்குச் சொந்தமான ஏபீசீ இயந்திரம் பழுது பார்க்கும் போது கூறு விலை பெறாமல் ரூபா 470,250 செலவில் சபை உறுப்பினரின் சகோதரரின் கராஜில் பழுது பார்க்கப்பட்டிருந்ததுடன் அதற்கான உத்தரவாத சான்றிதழும் பெறப்பட்டிருக்க வில்லை. | விசாரணை நடவடிக்கைகளுக்குரிய கோவைகள் கிடைத்த பின்னர் பதிலளிக்கப்படும். | சபையின் கொடுக்கல் வாங்கல்கள் முறையாகவும் வெளிப்படையாகவு ம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | மேற்கூறப்பட்ட பழுதுபார்த்தல் உரிய பிரகாரம் நிறைவேற்றப்பட்டமைக்கு டிப்போ பொறியியலாளர் பரிந்துரை | விசாரணை நடவடிக்கைகளுக்குரிய கோவைகள் கிடைத்த பின்னர் | ஏற்றுக் கொள்ளக்கூடிய பரிந்துரையின் அப்படிடையில் |

| | | | |
|---|---|---|---|
| | செய்திருந்த போதிலும் அது மீண்டும் செயற்படாமையினால் அந்த பழுதுபார்த்தலை மீண்டும் செய்வதற்கு 2023 மார்ச் 02 ஆம் திகதி டிப்போ பொறியியலாளர் பரிந்துரை செய்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் டிப்போ இயந்திரம் பயனற்றுக் காணப்பட்டது. | பதிலளிக்கப்படும். | கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 5,100,000 செலவில் நிர்மானிக்கப்பட்ட கல்மத்த பொதுச் சந்தையின் இரண்டு மாடிக் கட்டடத்தின் கடைகள் மீளாய்வாண்டில் வாடகைக்கு வழங்காமல் பயனற்றுக் காணப்பட்டது. | இந்தக் கடைகள் 2024 ஆம் ஆண்டின் போது கேள்வி கோரப்பட்டுள்ளதுடன் கேள்விதாரர் முன்வராமையின் அடிப்படையில் இவ்வாறு காணப்படுகின்றது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் மூலம் வருமானங்களை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வெளிவத்தகந்த குடிநீர் செயற்றிட்டத்திற்காக ரூபா 785,795 செலவில் 2022 நவம்பர் மாதம் கொள்வனவு செய்யப்பட்ட நீர்ப் பம்பி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பயனற்றுக் காணப்பட்டதுடன் ரூபா 1,994,605 செலவிடப்பட்ட இந்த செயற்றிட்டத்தில் இருந்து நலனாளிகளுக்கு நலன்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்றிட்டம் 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான காணியாக இனங்காணப்பட்ட 252 | காணியை கையேற்பதற்கு கட்டளைப் பத்திரம் தயாரித்து உள்ளூராட்சி | சபைக்குச் சொந்தமான காணிகளுக்காக |

| | | |
|---|---|---|
| காணிகளில் 48 காணிகளுக்குரிய சட்டரீதியான உரித்தை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்கள் சபையிடம் காணப்படவில்லை. | ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | சட்டரீதியான ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2015 ஆம் ஆண்டில் சபைக்குக் கிடைத்த இஸ்தியர் லோடர் இயந்திரம் நீர்ப் போக்குவரத்து ரக்டர் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபையின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் சபையின் பெயரில் பதிவுசெய்யப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்.**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிக்காக கணக்காய்வு விடயப்பரப்பிற்கு உள்ளடக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கட்ட கணக்காய்வுத் துறைகள் தொடர்பாக போதியளவில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தவறை ஏற்றுக் கொள்வதுடன் 2024 ஆம் ஆண்டு முதல் பொதியளவான கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய துறைகள் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்வாய்வு மேற்கொண்டு அறிக்கை வழங்கப்படும். |